**றம்புக்கன பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

றம்புக்கன பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் றம்புக்கன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வியாபார வரி நிலுவை வருமானம் ரூபா 504,551 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது சட்ட நடவடிக்கை எடுக்க செயற்பட்டுள்ள போதும், நாட்டில் காணப்பட்ட நிலைமை காரணமாக வருமானம் இழந்துள்ளதால் வரித் தொகை தொடர்பில் நியாயமொன்றை செய்யுமாறு மேற்கொண்ட கோரிக்கையை கவனித்து ஆளுநரின் தீர்மானம் பிரகாரம் முன்நடவடிக்கை எடுப்பதாகவும், அது வரை நிலுவை வருமானமாக முன்கொண்டு செல்லவில்லை எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய அனைத்து வருமானங்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 9,475,818 கணக்கீடு செய்யப்படாததால் அந்த அளவினால் இலாபம மற்றும் நடைமுறை சொத்துக்கள் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது முதலீட்டு வட்டியை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக 2019 ஆண்டில் கிடைத்த வீதவரி குத்தகை ரூபா 2,310,263 இற்காக வழங்கிய வட்டமான ரூபா 244,963 ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் 2020 ஆண்டிற்காக கிடைத்த பணம் வீதவரி கணனி மென்பொருள் பிரகாரம் கூடுதலாக காட்டப்படுவதாகவும் அது தொடர்பில் மேலும் கண்டறிந்து 2021 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்த வீதவரி குத்தகை ரூபா 1,878,567 ஆன போதும் முன் கிடைத்த வீதவரி கணக்கற்கு ரூபா 2,078,275 மாற்றப்பட்டதால் அக்கணக்கு மற்றும் வீதவரி கடன்படுனர் கணக்கு ரூபா 199,708 கூடுதலாக காட்டப்படடிருந்தது. | 2021 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அத்தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | பிரதேச சபைக்கு எதிராக 20 வழக்குகளிற்கும், சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக 03 வழக்குகளிற்கும் மீளாய்வாண்டில் வழக்கு கட்டணமாக ரூபா 471,422 செலுத்தியிருந்த போதும் வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | வழக்குகள் தொடர்பாக எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்று பிரகார பெறுமதி ரூபா 24,225,693 மற்றும் அட்டதவணை பிரகார பெறுமதி ரூபா 29,549,993 ஆனதில் ரூபா 5,324,300 ஆன வித்தியாசமானது. | இவ் வித்தியாசம் நீண்ட காலமாக நிலவுவதால் மேலும் பரிசோதித்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களிற்குரிய ரூபா 6,319,581 ஆன அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளின் பிரகாரம் அட்டவணைகளை சமர்பிக்க முடியாது | கணக்கு மீதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள மீதிகள் |

| | | |
|---|---|---|
| திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | இருந்துள்ளதாகவும், மேலும் பரிசோதித்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைந்த விதம் பற்றி குறிப்பிடும் அட்டவணைகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 185 இலக்க விதி | தவிசாளரின் அங்கீகாரத்துடன் 2016 மற்றும் 2020 ஆண்டுகளிற்கிடையிலான காலப்பகுதியில் 03 அரச வங்கிகளில் மேற்கொண்ட, மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறுமதி ரூபா 182,844,816 ஆன 10 முதலீடுகளிற்கு சபை அங்கீகாரம் பெறப்படவில்லை. | எதிர்காலத்தில் சபை அங்கீகாரத்தை பெற்று முதலீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 42,748,428 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 24,858,197 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வீதவரி மற்றும் குத்தகை | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய அறிவிடப்பட வேண்டிய நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 76,909 ஆனது. | நிலவிய கொரோனா தொற்று காரணமாக வருமான சேகரிப்பு முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் நிலவியதாகவும், தற்போது திட்டம் தயாரித்து முன்னேற்றத்தை உயர் மட்டத்தில் பேணிக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) வாடகை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடையறை குத்தகை வாடகை மீதி ரூபா 1,933,875 ஆனதுடன் கடையறைகளில் குறைபாடுகள் காணப்பட்டதால் 02 ஆண்டுகளை விஞ்சிய மீதி அறிவிடப்படாது காணப்படுவதுடன், 05 ஆண்டுகளை விஞ்சிய நிலுவையை அறிவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | கடையறைகளின் குறைபாடு காரணமாக வாடகை செலுத்தாதல், விரைவில் குறைகளை சீர்செய்து இந் நிலுவை தொடர்பில் முன்நடவடிக்கை எடுப்பதாகவும் பின்னவல யானைகள் சரனாலய அருகின் வாகன தரிப்பிடம், மற்றும் வாழை கடை நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ரூபா 530,581 ஆன 05 ஆண்களை விஞ்சிய நிலுவையை அறவிடுவது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறைகளை சீர் செய்து கொடுத்து உடன்படிக்கை பிரகாரம் நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,252,229 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 16,430,179 ஆனது. | நீதிமன்ற தண்டப்பணம்/ முத்திரைக் கட்டணம் தொடர்பாக குறித்த நிறுவனத்தை தொடர்ந்து அறிவூட்டிய போதும் மீளாய்வாண்டிற்காக குறித்த பணம் சபைக்கு கிடைப்பது அவ் வருடத்தில் அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த நிறுவனத்தை அறிவூட்டி சபைக்கு அறிவிட வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 ஆண்டு திரட்டிய கழிவுப் பொருட்கள் 2208 டொன்கள் அளவாவதுடன் கழிவுப் பொருள் முகாமைக்காக மேற்கொண்ட செலவு ரூபா 18,693,421 அளவாகும். இருந்தும் சபையினால கழிவுப் பொருட்களை வேறாக்கி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காததுடன் இயற்கை பசளை உற்பத்தி செய்து எஞ்சுகின்ற உக்கலடையாத பொருட்கள் மற்றும் பொலிதீன்களை அழிக்க அல்லது மீள்சுழற்சிக்குட்படுத்த வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தி இருக்கவில்லை. | தினந்தோறும் ஒன்றுசேரும் பொலிதீன்களிற்காக எரிகருவி ஒன்றை நிர்மாணிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கருத்திட்ட அறிக்கை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அங்கீகரிக்கப்படாததுடன் சுகாதார குப்பைகளை தடுத்து வைப்பதற்காக காணி ஒன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்திய போதும் இது வரை தீர்வொன்று கிடைக்காததால் எதிர்காலத்தில் அதற்காக Insee நிறுவனத்துடன் இனைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபை கழிவுகளை முகாமை செய்வது தொடர்பில் முறையாக செயற்பட வேண்டும். |